கிழக்குப் பல்கலைக்கழகம், இலங்கை

மூன்றாம் வருட கலைமாணித் தேர்வு – 2011/2012 (மீள்பரீட்சை)
(ஒக்டோபர் 2017)

LIBRARY EASTERN UNIVERSITY

## HC 301 இந்து சமயத்தின் சிந்தனை மரபுகள்

நேரம் : 03 மணித்தியாலங்கள்

எவையேனும் ஐந்து வினாக்களுக்கு விடை தருக.

01. "இந்து மதத்தின் முதன் நூல்கள் வேதாகமங்கள்" இதனைக் கருத்திற் கொண்டு மேல்வருவனவற்றை விளக்குக.

    (அ) வேதங்களும் தத்துவ ஊற்றுக்களும்.
    (ஆ) ஆகமங்கள் கூறும் கோயில்களும் தத்துவக் கருத்தியல்களும்

02. உபநிடதங்கள் வெளிப்படுத்தும் அடிப்படைத் தத்துவக் கருத்துக்களை மேல்வரும் தலைப்புக்களில் விளக்குக.

    (அ) இறைக் கோட்பாடு
    (ஆ) பிரபஞ்சவியல்
    (இ) ஆன்மக் கோட்பாடு

03. "யோக தத்துவ சிந்தனைகள் ஐவகை தர்சனங்களில் சிறப்புடையது." இக்கூற்றினை அடிப்படையாகக் கொண்டு மேல்வருவனவற்றைக் பரிசீலிக்குக.

    (அ) இறையிருப்பும், இறைவனின் மேலான தன்மைகளும்
    (ஆ) ஆன்மா

04. சைவ சித்தாந்த இறைக் கொள்கையினை தகுந்த ஆதாரங்களுடன் மேல்வரும் தலைப்புக்களில் கருத்துரை தருக.

    (அ) பதியிருப்பு
    (ஆ) பதியிலக்கணம்

05. மத்துவரின் துவைதக் கோட்பாட்டினை ஆராய்க.

06. சித்தர்கள் கூறும் தத்துவக் கருத்துக்களை சமுதாய விருத்தியுடன் தொடர்புபடுத்தி ஆராய்க.

07. இராமானுஜரின் வாழ்க்கை வரலாற்றினை சுருக்கமாக விளக்கி, வேதாந்த தத்துவ சிந்தனை மரபிற்கு அவரது பங்களிப்புக்களை மதிப்பிடுக.

08. மேல்வருவனவற்றுள் எவையேனும் **நான்கினுக்கு** குறிப்புரை தருக.

    (அ) பகவத் கீதை
    (ஆ) திருமந்திரம்
    (இ) ஆணவம்
    (ஈ) சங்கரரும் விவர்த்தவாதமும்
    (உ) சாங்கிய தர்சனத்தின் புருடன்

*****